# <u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | **:** | O.S.No. 393/1995 | **CNR No.** | **:** | TNKI13-000001-1995 |
| **Name** | **:** | வேடியம்மாள் | **கணவர் பெயர்** | **:** | முருகன் |
| **Witness for** | **:** | Defendant | **Calling** | **:** | DW4 |
| **Age** | **:** | 66 | **Village** | **:** | திப்பம்பட்டி |
| **Taluk** | **:** | ஊத்தங்கரை | **District** | **:** | கிருஷ்ணகிரி |
| **Start Time** | **:** | 12:20 PM | **End Time** | **:** | 12:35 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 12.11.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

**(1) எனது பிரமாணபத்திரத்தில் 25.05.1978 தேதியிட்ட கிரைய பத்திரம் மூலம் பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்லும் நிலையில் கிரைய பத்திரம் எழுதும் போது உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். யார் இடம் இருந்து கிரையம் வாங்கினேன் என்றால் கிரையமாக வாங்கவில்லை எனது அம்மா உயில் பத்திரம் எழுதிக்கொடுத்தார். இந்த வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். எனது அப்பா இறந்த பிறகு செய்துள்ளேன். நான் இந்த வழக்கில் எந்த எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யவில்லை என்றும் 6ம் பிரதிவாதி தான் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் எனக்கு சாட்சியம் அளிக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல.**

(2) கடந்த **13.09.2013** தேதியிட்ட எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் வாதி பம்புசெட்டை சேதப்படுத்தினார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. **பி.வா.சா.ஆ.35 முதல் பி.வா.சா.ஆ.38** வரையிலான ஆவணங்கள் இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு ஏற்படுத்தபட்ட ஆவணம் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு ஏற்பட்ட ஆவணம் என்பதால் அது வாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. உரிமை இருப்பதால் எனது அப்பா, அம்மா எங்கள் பெயரில் எழுதி கொடுத்தார்கள். வாதியின் உரிமையை ஏமாற்று வேண்டும் என்பதற்காக **பி.வா.சா.ஆ.35 முதல் பி.வா.சா.ஆ.38** ஆவணங்கள் மோசடியாக ஏற்படுத்தபட்டுள்ளது என்றால் சரியல்ல. **பி.வா.சா.ஆ.37** வேடி கவுண்டர் உயில் எழுதி வைத்தார் என்று சொல்லும் ஆவணம் நாங்களாக தயார் செய்து கொண்ட ஆவணம் என்பதால் தான் ஒவ்வொரு பத்திரத்திலும் கையொப்பங்கள் வெவ்வேறாக உள்ளது என்றால் சரியல்ல. **பி.வா.சா.ஆ.37** ஆவணம் எங்களுக்கு வேண்டிய சாட்சிகளை வைத்து மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி உயில் ஆவணத்தை ஏன் சார்பதிவளார் அலுவலகத்தில் பதிவு செய்யவில்லை என்றால் எனது அம்மா உடல் நிலை சரியில்லாததால் பதிவு செய்யவில்லை. **பி.வா.சா.ஆ.37** ஆவணம் எழுதப்பட்டதாக சொல்லும் தேதியில் அவர் நல்ல மனநிலையுடன் இல்லை என்றால் சரியல்ல. உயில் எழுதப்பட்ட வழக்கறிஞர் அலுவலகத்திற்கும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் எனக்கு தெரியாது. உண்மையில் உயில் எழுதியிருந்தால் அதை சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து எழுதியிருப்போம் என்றும் அது மோசடியான ஆவணம் என்பதால் தான் அவ்வாறு எழுதவில்லை என்றால் சரியல்ல.

(3) வாதி ராஜா என்ற வேடிச்சி கவுண்டரின் மகன் என்றும் அவருக்கு வழக்கு சொத்தில் பங்குரிமை உள்ளது என்றால் சரியல்ல. ராஜா தனது பங்கை எழுதி கொடுத்துவிட்டு சென்றுவிட்டார். ராஜா பங்கை எழுதி கொடுத்துவிட்டார் என்று சொல்வது பொய் என்றும் எனக்கு எவ்வாறு வழக்கு சொத்து பங்குரிமை உள்ளதோ அதே போல் வாதிக்கு அவரது அப்பா பங்கில் உரிமை உள்ளது என்றால் சரியல்ல. நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் எனது சாட்சியம் ஏற்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வாதியின் பங்குரிமையை மறுக்க பிரதிவாதிகளுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. அதனால் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

(4) குறுக்கு விசாரணை முடிவுற்றது.

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

sd/-xxx

District Munsif
Uthangarai